**ஐக்கிய அமெரிக்க தூதரகம்**
**கொழும்பு**
**ஊடக அறிக்கை**
பொது அலுவல்கள் பிரிவு

தொ.பே.: +94 (1) 249-8100 ● பெக்ஸ்: +94 (1) 244-9070
ஈமெயில்: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 11282018

**அமெரிக்காவில் உள்ள இலங்கை மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரிப்பு**

**கொழும்பு நவம்பர் 28:** சர்வதேச கற்கைகள் பரிமாற்றம் தொடர்பான *2018 Open Doors Report* இற்கு அமைய அமெரிக்காவில் கல்விபயிலும் இலங்கை மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தற்பொழுது அமெரிக்காவிலுள்ள உயர்கல்வி நிறுவனங்களில் 3,309 இலங்கையர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். உலகளாவிய ரீதியில் சர்வதேச மாணவர்களுக்கு கல்விகளை வழங்குவதில் அமெரிக்கா தொடர்ந்தும் முன்னிலையில் திகழ்கிறது. அமெரிக்காவில் பட்டப்படிப்புகளை மேற்கொள்ளும் இலங்கையர்களின் எண்ணிக்கை கடந்த வருடம் 7 சதவீதத்துக்கு மேற்பட்ட எண்ணிக்கையினால் அதிகரித்துள்ளது.

“இலங்கையின் பொருளாதாரத்துக்குத் தேவையான முக்கிய திறன்களை வளர்த்து கொண்டும் எமது இரு நாடுகளுக்கும் இடையிலான 70 வருட நட்புறவை விஸ்தரிப்பதற்கு உதவியாகவும் இலங்கை மாணவர்கள் உலகத் தரமான கல்வியை அமெரிக்காவில் பெற்றுக் கொள்கின்றனர்,” என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் தெரிவித்தார்.

“எமது அறிவியல் தொழில்துறையின் முன்னால் இருக்கும் சவால்களுக்கு முகம்கொடுக்க கூடிய நபர்களை உருவாக்குவதில் நம்பிக்கை கொண்ட சில அற்புதமான பேராசியர்களினால் வழிநடத்தப்படுவதற்கான வாய்ப்பை நான் பெற்றிருந்தேன். அமெரிக்காவில் நான் மேற்கொண்ட கல்வியானது எனது அறிவெல்லைகளை விரிவுபடுத்தியதுடன், இந்த போட்டிமிக்க உலகளாவிய சூழ்நிலையில் அறிவியில் துறையில் பணியை மேற்கொள்வதற்கான நம்பிக்கையையும் எனக்கு வழங்கியிருந்தது,” என்று வடக்கு டக்கோட்டா பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற அஷ்ரி.்.பா அலி தெரிவித்தார்.

அமெரிக்காவில் கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்குத் தேவையான ஆலோசனை சேவைகள் மற்றும் வள நூலகங்களை EducationUSA இலவசமாக வழங்கி வருகிறது. இது இலக்கம் 55, அப்துல் கபூர் மாவத்தை, கொழும்பு என்ற முகவரியில் உள்ள அமெரிக்க-இலங்கை புல்பிரைட் கொமிஷனில் அமைந்துள்ளது. அறிவுரை ஆலோசகர் ஒருவரின் உதவியுடன் மாணவர்கள் இங்கு கல்வி வாய்ப்புக்கள் குறித்து தேடி அறிந்து கொள்ள முடியும். இந்த சேவைகளுக்கு கட்டணம் அறவிடப்படுவதில்லை. கண்டி, யாழ்ப்பாணம் மற்றும் மாத்தறை ஆகிய இடங்களில் அமைந்துள்ள அமெரிக்கன் கோர்னர்களிலும் இதேபோன்ற ஆலோசனை அமர்வுகள் நடத்தப்படுகின்றன.

2016/17 காலப் பகுதியில் வெளிநாடுகளில் கல்வி கற்கும் அமெரிக்க மாணவர்களின் எண்ணிக்கை 2.3 வீதத்தால் அதாவது 337,727 ஆக அதிகரித்துள்ளது. இளங்கலை பட்டப்படிப்பு காலத்தில் அமெரிக்காவில் உள்ள 10 மாணவர்களில் ஏறக்குறைய ஒருவர் வெளிநாடுகளில் கல்விகற்கின்றனர்.

*Open Doors* அறிக்கையானது சர்வதேச கல்வி நிறுவனத்தினால் (Institute of International Education - IIE) வெளியிடப்பட்டுள்ளது. சர்வதேச கல்வி நிறுவனமானது 1919 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டதில் இருந்து அமெரிக்காவிலுள்ள சர்வதேச மாணவர்கள் பற்றிய வருடாந்த புள்ளிவிபர ஆய்வை நடத்தியுள்ளதுடன், 1972 ஆம் ஆண்டில் இருந்து அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் பணியகத்துடன் இணைந்து பணியாற்றி வருகிறது.